ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1645/45 - 2010 මාර්තු 20 වැනි සෙනසුරාදා - 2010.03.20

*1645/45 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 20 ஆந் திகதி சனிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின்படி, நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் அகமட் லெப்பை மரைக்கார் அதாஉல்லா ஆகிய நான், இச்சபையின் ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்றிட்டம் 5 இன் கீழ் சிலாபம் நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்பு நிலையம் நிர்மாணிப்பது தொடர்பாக காணித்துண்டொன்று தேவைப்படுவதனால், கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளின் அசையா சொத்துக்களின் கொள்ளலை இக்கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றேன்.

அகமட் லெப்பை மரைக்கார் அதாஉல்லா,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர்.

5/2/2/867,
நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு,
இல. 34, நாரஹேன்பிட்டி வீதி,
நாவல,
2009, ஒற்றோபர் 5.

#### அட்டவணை

குருநாகல் மாவட்டம், பிங்கிரியா பிரதேச செயலாளர் பிரிவில் 1478 விலத்தவ கிராம அலுவலர் பிரிவின், விஹாரகமை எனும் கிராமத்தில் அமைந்துள்ள காணி தொடர்பாக அதிகாரமளிக்கப்பட்ட நிலஅளவையாளர் திரு. ஜீ. அபேகுணவர்த்தன அவர்களினால் தயாரிக்கப்பட்டுள்ள இல. 2008/டப் 1 ஐக் கொண்ட வரைபடத்தின் துண்டு இல. 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள சுமார் 2.0239 ஹெக்டேயார் (5 ஏக்கர்) விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளைக் கொண்ட காணித்துண்டுகள் :-

வடக்கு : இல. 1445 இறுதி கிராம வரைபடத்தின் துண்டு இல. 2 இன் எஞ்சிய பகுதி ;

கிழக்கு : இல. 1445 இறுதி கிராம வரைபடத்தின் துண்டு இல. 2 இன் எஞ்சிய பகுதி ;

தெற்கு : பிங்கிரியா கொலமுனைஓயா அமுனையில் இருந்து விலத்தவை வ ரையிலான இராட்சத கால்வாயுடன் இணையும் நுழைவாயில் (இ.கி.வ. 1445 துண்டு இல. 11) ;

மேற்கு : இல. 1445 இறுதி கிராம வரைபடத்தின் துண்டு இல. 2 இன் எஞ்சிய பகுதி.

உரிமைகோருபவர்களின் பெயர்களும் முகவரிகளும் :

1. நம்பிக்கைப் பொறுப்பாளர்,
நம்பிக்கைப் பொறுப்புத் திணைக்களம்,
புளர்ஸ் வீதி, கொழும்பு 7.

2. விஹாராதிபதி,
வண. மலகனே அத்ததஸ்ஸீ தேரர்,
பிங்கிரிய ரஜமஹா விஹாரை,
பிங்கிரிய.

4- 189